மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 18/2021 நாள்– 26.02.2024

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.மாரிராஜ் Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– மோகன்ராஜ் (பி.வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) பெத்துரெட்டிப்பட்டி கிராம ச.எண்.393/10ல் 1.4 சென்ட் மனை நிலத்திற்கு 1ம் பிரதிவாதியின் தாத்தா பெருமாள் நாயக்கரின் மகன் பெருமாள் நாயக்கர் பெயரில் ஏற்பட்ட நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா நகல் – பி.வா.சா.ஆ.1

2) 19.11.1996 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தாத்தா பெருமாள் நாயக்கரின் இறப்புச்சான்றிதல் நகல் – பி.வா.சா.ஆ.2

3) 1ம் பிரதிவாதியின் பாட்டனார் பெருமாள்சாமி நாயக்கர் த/பெ.பெருமாள்சாமி நாயக்கரின் வாரிசு சான்றிதழ் நகல் – பி.வா.சா.ஆ.3

4) 26.05.2006 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தந்தை துரைராஜ் நாயக்கர் 1ம் பிரதிவாதி மோகன்ராஜ்க்கு எழுதி பதிவு செய்து கொடுத்த பெத்துரெட்டிபட்டி கிராமம், மஜரா பழைய ச.எண்.96/1 (10.4 சென்ட்) (புதிய ச.எண்கள். 393/10, 393/26 ஏ)

மனையும் அதில் கட்டப்பட்டுள்ள மண்சுவர் ஓட்டடுக்கு வீட்டிற்கான உயில் பத்திரம் அசல் – பி.வா.சா.ஆ.4

5) 27.05.2014 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தந்தை துரைராஜின் இறப்புச்சான்றிதழ் நகல் – பி.வா.சா.ஆ.5

6) 03.06.2014 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தந்தை துரைராஜின் வாரிசு சான்றிதழ் நகல் – பி.வா.சா.ஆ.6

7) 18.11.2020 ம் தேதியிட்ட போத்திரெட்டிபட்டி கிராம நத்தம் ச.எண்.393/26 ஏ (பழைய ச.எண்.96/1ல் பகுதி) இடத்திற்கு இலவச வீட்டுமனைப்பட்டா கோரி 1ம் பிரதிவாதி கொடுத்த விண்ணப்பமும் கிராம நிர்வாக அலுவலரின் பரிந்துரையும் அறிக்கையும் நகல் – பி.வா.சா.ஆ.7

8) 07.12.2020 ம் தேதியிட்ட பெத்துரெட்டிபட்டி கிராம நத்தம் ச.எண்.393/26 ஏ (0.3761.0 ச.மீ) மனை நிலத்திற்கு 1ம் பிரதிவாதி மோகன்ராஜ் இலவச வீட்டுமனை பட்டா கோரி வழங்கிய மனுவிற்கு என்.சுப்பையாபுரம் கிராம் பொது மக்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று கொடுத்த வாக்குமூலம் நகல் – பி.வா.சா.ஆ.8

9) 24.08.2011 ம் தேதியிட்ட 1ம் மனுதாரரின் தாயார் நத்தம் ச.எண்.393/26 ஏ (10.44 செண்ட்) நிலத்திற்கு வீட்டிற்கு பட்டா வழங்க கோரி மாவட்ட ஆட்சியர், விருதுநகர், முதலமைச்சரின் தனிப்பிரிவு சாத்தூர் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், பெத்துரெட்டிபட்டி ஆகியோருக்கு கொடுத்த மனு நகல் – பி.வா.சா.ஆ.9

(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)